செய்தி வெளியீடு எண். 6/2017 நாள் 26.01.2017

# சென்னைக் குடிநீர் வாரியத்தில் குடியரசு தின விழாவில் நிர்வாக இயக்குநர் திரு. வி.அருண் ராய், இ,ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் குடியரசு தின விழா இன்று (26.01.2017) சிறப்பாக நடைபெற்றது.

குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் திரு. வி.அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இவ்விழாவில் வாரியத்தில் 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற முறையில் தூய்மையாக பணியாற்றிய அலுவலர்களை பாராட்டி 38 பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்களை நிர்வாக இயக்குநர் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் சென்னைக் குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திரு. தி.லட்சுமணன், தலைமைப் பொறியாளர்கள் திரு.ஜி.சங்கரலிங்கம், திரு.ஜி.சத்தியமூர்த்தி, திரு.ஏ.அப்துல் ரஷீத், திரு,எஸ்.பிருஷோத்தமன், பொது மேலாளர் திரு.வ.முருகேசன், மேற்பார்வைப் பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்




சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று (26.01.2017) நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் திரு.வி.அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் வாரியத்தில் 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற முறையில் தூய்மையாக பணியாற்றிய அலுவலர்களு க்கு நற்சான்றிதழ் வழங்கினார்கள். உடன் உயர் அலுவலர்கள் உள்ளனர்.




சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று (26.01.2017) நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் திரு.வி.அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் தேசியத் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள். உடன் உயர் அலுவலர்கள் உள்ளனர்.